From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.05/2017

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜலெட்சுமி | Father/Husband Name | : திருமால்மணி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 12.02.18. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் சேக்கிபட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். ஆஜர் எதிரி என் கணவர். 2,3 எதிரிகள் மாமனார் மற்றும் மாமியார். 2012ம் வருடம் 4வது மாதம் ஒருநாள் சமுத்திராப்பட்டியிலுள்ள முருகன் கோவிலில் வைத்து எனக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தின்போது எனக்கு 11 பவுனும், என் கணவருக்கு 3 பவுனும், ஹீரோஹோண்டா இருசக்கர வாகனம் பிரிட்ஜ் போன்ற ஒரு லட்சம் ரூபாய் சீர்வரிசை சாமான்களை எனது பெற்றோர்கள் கொடுத்தார்கள். 6 மாதங்கள் மட்டும் நான் எனது கணவருடன் சந்தோசமாக வாழ்ந்தேன். பிறகு எனது வளைகாப்பிற்காக எனது பெற்றோரின் வீட்டிற்கு அழைத்துச்சென்றார்கள். பிறகு குழந்தை பிறந்த பிறகு ஒரு வருடங்களாக எதிரிகள் யாரும் வராததால் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கச்சென்றேன். அப்போது எனது மாமனார் என்னை சமாதானப்படுத்தி அவர் வீட்டிற்கு அழைத்துச்சென்றார். அங்கு எதிரிகள் அனைவரும் எனக்கு சாப்பாடு கொடுக்காமல், குளிக்கவிடாமலும், நல்ல சேலை கட்டவிடாமலும், நீ கருவாச்சியாக இருக்கிறாய் உன்னை எங்களுக்கு பிடிக்கவில்லை, என் மகனுக்கும் பிடிக்காது என்று சொல்லி என்னை எனது குழந்தையுடன் என் பெற்றோர் வீட்டிற்கு செல்லுமாறும் எனது மகனுக்கு வேறு ஒரு திருமணம் செய்யவேண்டும் என்று அடித்து கொடுமைப்படுத்தினார்கள். பிறகு நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.05/2017

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமமூர்த்தி | Father/Husband Name | : ராமசாமி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 12.02.18. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் சேக்கிபட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1 எனது மகள். ஆஜர் எதிரி என் மருமகன். 2,3 எதிரிகள் எனது சம்மந்திகள். 2012ம் வருடம் பஙகுனி 22ம் தேதி சமுத்திராப்பட்டியிலுள்ள பழனியாண்வர் கோவிலில் வைத்து எனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தின்போது எனதுமகளுக்கு 11 பவுனும், மாப்பிள்ளைக்கு 3 பவுனும், ஹீரோஹோண்டா இருசக்கர வாகனம் பிரிட்ஜ், கட்டில், மெத்தை போன்ற ஒரு லட்சம் ரூபாய் சீர்வரிசை சாமான்களை நாங்கள் கொடுத்தோம். திருமணமாகி ஒரு வருடத்திற்கு பிறகு எனது மகள் கருப்பாக இருப்பதாலும், சமைக்க தெரியவில்லை என்று சொல்லி எனது வீட்டிற்கு அனுப்பிவைத்துவிட்டார்கள். அவரிடம் சென்று நான் பேசியதன்பேரில் தனிக்குடித்தனமாக ஒரு வருடம் மட்டும் வைத்து வாழ்ந்தார். பிறகு என் மகளை சுத்தமாக பிடிக்கவே இல்லை என்று கூறி குழந்தையுடன் சேர்த்து அடித்து விரட்டிவிட்டார்கள். அதன்பிறகு காவல்நிலையம் சென்று புகார்கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளத்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.05/2017

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : மகேஸ்வரி | Father/Husband Name | : ராமமூர்த்தி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 12.02.18. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் சேக்கிபட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1 எனது மகள். அ.சா.2 எனது கணவர். ஆஜர் எதிரி என் மருமகன். 2,3 எதிரிகள் எனது சம்மந்திகள். 2012ம் வருடம் பஙகுனி 22ம் தேதி சமுத்திராப்பட்டியிலுள்ள பழனியாண்டவர் கோவிலில் வைத்து எனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தின்போது எனதுமகளுக்கு 11 பவுனும், மாப்பிள்ளைக்கு 3 பவுனும், ஹீரோஹோண்டா இருசக்கர வாகனம் பிரிட்ஜ், கட்டில், மெத்தை போன்ற ஒரு லட்சம் ரூபாய் சீர்வரிசை சாமான்களை நாங்கள் கொடுத்தோம். திருமணத்திற்கு பிறக 6 மாதங்கள் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். பிறக வளைகாப்பு நடத்திவிட்டு எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தோம். அதிலிருந்து குழந்தை பிறந்த ஒரு வருடம்வரைக்கும் எதிரிகள் யாரும் பார்க்க வரவே இல்லை. அதன்பிறகு சமாதானப்படுத்தி குழந்தையுடன் அழைத்துச்சென்றார்கள். என் மகளை கருவாச்சியாக இருக்கிறாய் என்றும், பேய்மாதிரி சாப்பிடுகிறாய் என்றும் சொல்லி அடித்து கொடுமைப்படுத்தினார்கள். இந்தசம்பவத்தை எனது மகள் எங்களிடம் சொன்னார். பின்னர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளத்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.05/2017

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயராமன். | Father/Husband Name | : பெரியகோண் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 12.02.18. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் சேக்கிபட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். எதிரிகளை தெரியும். அ.சா.1ம் எதிரிகளும் எனக்கு உறவினர்கள். 2012ம் வருடம் ஒருநாள் சமுத்திராப்பட்டியிலுள்ள பழனியாண்டவர் முருகன் கோயிலில் வைத்து 1ம் எதிரிக்கும், அ.சா.1க்கும் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு இருசக்கர வாகனம் மற்றும் பண்டபாத்திரங்கள் சீர்வரிசையாக கொடுத்தார்கள். திருமணமாகி 6 மாதத்திற்கு பிறகு வளைகாப்பிற்கு அ.சா.1ஐ அவரது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். அதன்பிறகு குழந்தை பிறந்தது. எதிரிகள் பார்க்கவரவில்லை. பிறகு பஞ்சாயத்து பேசி அ.சா.1ஐ திரும்ப அழைத்துச்சென்றார்கள். பிறகு ஒரு மாதம் கழித்து அ.சா.1ஐ வேண்டாம் என்று சொல்லி எதிரிகள் அனுப்பி வைத்துவிட்டார்கள். அதற்கு பிறகு நடந்த விவரம் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளத்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.05/2017

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமசாமி | Father/Husband Name | : லெட்சுமணன் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 12.02.18. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் சேக்கிபட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். எதிரிகளை தெரியும். அ.சா.1ம் எதிரிகளும் எனக்கு உறவினர்கள். 2012ம் வருடம் சமுத்திராப்பட்டியிலுள்ள பழனியாண்டவர் முருகன் கோயிலில் வைத்து 1ம் எதிரிக்கும், அ.சா.1க்கும் திருமணம் நடந்தது. திருமணத்தின்போது அ.சா.1க்கு 11 பவுன் நகையும், 1வது எதிரிக்கு 3 பவுன் நகையும் திருமணத்திற்கு இருசக்கர வாகனம் மற்றும் பண்டபாத்திரங்கள் சீர்வரிசையாக கொடுத்தார்கள். அவர்களுக்கு ஒரு பெண்குழந்தை உள்ளது. அ.சா.1 கருப்பாக இருப்பதால் அவரை 1ம் எதிரிக்கு பிடிக்கவில்லை என சண்டைபோட்டு பிரிந்துவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.05/2017

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : இந்திரன் | Father/Husband Name | : சுத்திகருப்பக் கோண் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 11.02.19. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2019.

முதல் விசாரணை:

நான் சேக்கிபட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். எதிரிகளை தெரியும். 5 அல்லது 6 வருடங்களுக்கு முன்பாக அ.சா.1க்கும் 1வது எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தின்போது அ.சா.1க்கு அவரது பெற்றோர் 14 பவுன் நகையும், ஒரு இருசக்கர வாகனமும் மற்றும் பண்டபாத்திரங்கள் சீதனமாக கொடுத்தனர். பிறகு அவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது. பிறகு அ.சா.1. நடவடிக்கை சரியில்லை என்று கருப்பாக இருப்பதாகவும் அவர்களுக்குள் அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். பிறகு சண்டைபோட்டு அ.சா.1ஐ அவரது பெற்றோர் வீட்டில் கொண்டுவந்து விட்டுவிட்டுச்சென்றார்கள். அது விசயமாக பஞ்சாயத்து நடந்தது. போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

அ.சா.1க்கு நான் உறவினர், பங்காளி முறை. அ.சா.1 என்னை சாட்சிசொல்ல அழைத்ததன்பேரில் நான் நீதிமன்றம் வந்திருக்கிறேன். அ.சா.1 என்ன புகார் கொடுத்திருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். விவாகரத்து கேஸ் போட்டிருப்பதாக சொன்னார்கள். எவ்வளவு நகை போட்டார்கள் என்று அவர்கள் சொல்லித்தான் எனக்கு தெரியும். சண்டைபோட்டு அடித்த விவரம் அ.சா.1 சொல்லித்தான் எனக்கு தெரியும். அ.சா.1 எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

From-39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.05/2017

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : பஞ்சு | Father/Husband Name | : பனையன் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 11.02.19. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2019.

முதல் விசாரணை:

நான் கொம்பயன்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 எனது அண்ணன் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார். சுமார் 2 வருடம் இருந்தார். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசுதரப்பில் இந்த சாடசியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டப்பட்டது. சாட்சியின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களைபரிசீலனை செய்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154ன்கீழ் அனுமதி வழங்கப்பட்டது.

குறுக்கு விசாரணை அரசுதரப்பில்:

போலிசார் விசாரணையில் கடந்த 04.04.12ம் தேதி சமுத்திராப்பட்டியிலுள்ள பழனியாண்டவர் கோயிலில் வைத்து 1வது எதிரிக்கும் அ.சா.1க்கும் திருமணம நடந்ததாகவும். திருமணத்திற்கு பிறகு அ.சா.1 கருப்பாக இருப்பதாக கூறி அவரின் கணவரும் மாமியார் மாமனாரும் அவரை கொடுமைப்படுத்தியதாகவும், பிறகு 11.09.13ம் தேதி அ.சா.1க்கு பெண்குழந்தை பிறந்ததாகவும், பிறகு 1வது எதிரி குடிப்பழக்கமும், தகாத பெண்களுடன் உறவு வைத்துக்கொண்டு அ.சா.1ஐ கொடுமைப்படுத்தியும் அவரது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பிவிட்டதாகவும், பக்கத்து வீட்டில் குடியிருப்பதால் அதன் விவரம் எனக்கு தெரியும் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் எதிரிக்கு சாதகமாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.